திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, கை ரிக்ஷாக்களுக்குப் பதிலாக சைக்கிள் ரிக்ஷா கொடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது சென்னை நகரைப் பொறுத்த வரையில் என்றால், மற்ற மாவட்டங்களைப் பொறுத்து என்ன நிலை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே கை ரிக்ஷாக்களை இழுத்து பிழைப்பினை நடத்துகின்றவர்கள் மூன்று மாவட்டங்களிலே—அதாவது சென்னை, செங்கற்பட்டு மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களிலேதான்—இருந்தார்கள். இந்த மூன்று மாவட்டங்களில் கை ரிக்ஷாக்கள் ஒழிக்கப்பட்டதன் மூலம் தமிழ் நாட்டில் கை ரிக்ஷாக்கள் இல்லை என்ற நிலைமையை நாம் உருவாக்கியிருக்கிறோம்.

உடுக்குறியிடாத வினாக்கள்

Development of Madurai City as a Tourist Centre.

11 *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the present plans of the Government to make Madurai more attractive to foreign and inland tourists; and

(*b*) the help, financial and otherwise, that is expected from the Central Government in this regard?

A.—

A statement @ is placed on the table of the House.

Medical Identification Cards.

12. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the N.G.G.Os. are supplied with Medical Identification Cards;

(*b*) if so, whether these cards are given to the Government 'B' Wing teachers; and

(*c*) whether these cards will also be given to aided school teachers?

A.—

(*a*) Yes

(*b*) Yes

@ 82-83 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது

1974 மார்ச் 26]

(c) As the Identification Certificates issued by the managements of aided schools are considered to be sufficient there is no need to issue Medical Identification Cards to aided school teachers

வாடகைக் கட்டிடங்களில் கல்வி அலுவலகங்கள்.

13 வின—திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாவட்டக் கல்வி அதிகாரி அலுவலகங்களில் வாடகைக் கட்டிடங்களில் இயங்குபவை எத்தனை ?

(இ) அவைகளுக்காக ஒரு வருடத்திற்கு, வாடகையாகக் கொடுக்கும் தொகை எவ்வளவு ?

(உ) அவைகளுக்காக சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

விடை—(அ) 39.

(இ) ரூபாய் 1,69,008.

(உ) 1974-75 ஆம் ஆண்டில் கல்வித் துறையைச் சேர்ந்த அலுவலகங்களுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்கென, ரூபாய் 5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பறம்புமலைப் பகுதியில் காட்டுமரங்களை வளர்க்கும் திட்டம்

14 வின—தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1971–72, 1972–73-ம் ஆண்டுகளில் பறம்புமலைப் பகுதியில் காட்டு மரங்களை வளர்க்கும் திட்டத்தின் கீழ் வளர்க்கப்பட்ட மரங்கள் இனம் வாரியாக எவ்வளவு ?

விடை.—1971–72, மற்றும் 1972–73-ஆம் ஆண்டுகளில் பிரான்மலையில் வளர்க்கப்பட்ட மரங்களின் விபரங்கள் பின்வருமாறு :

ஆண்டு	மரம்	எண்ணிக்கை
1971–72	மாமரம்	160
	பலா	50
	முந்திரி	320
	மூங்கில்	320

ஆண்டு	மரம்	எண்ணிக்கை
	ஆர்குலிபார்மிஸ் (புதுவகை வேலம்)	500
	இலவம்	100
	கற்பூரம் மரம் (பலவகை)	1,500
1972-73	பலவகை (முந்திரி, கொன்றை, புளி. எடை. கற்பூர மரம், சிவப்பு சந்தனம்)	3,200

மாதவரம் பால் பண்ணைக்குச் சேரவேண்டிய தொகை

15. Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state with reference to the Legislative Council Starred Question No. 69, answered on 18th August 1973 the steps taken to recover the outstanding from the parties concerned

A.—

The Institutions have been addressed giving particulars of the outstanding dues. In addition, personal contacts have also been made. The outstanding dues have been reduced to Rs. 3,552.13.

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்

(1) ஆளுநரிடமிருந்து செய்தி

MR. CHAIRMAN : I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Motor Vehicles Taxation Bill, 1974.

(2) பேரவையிலிருந்து செய்தி

MR. CHAIRMAN : I have also received a message from the Hon. Speaker, Legislative Assembly transmitting a copy of the Tamil Nadu Motor Vehicles Taxation Bill, 1974 (L.A. Bill No. 10 of 1974) as passed by the Assemby and signed by him for the